**OS. 132/2024**

**நாள். 12.03.2026.**

**வா.சா. 1 – சத்தியராஜ், த/பெ.ராமமூர்த்தி**

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–

சர்வே எண்.119/6 ல் கண்ட மொத்த சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் முத்து என்பவருக்கு பாத்தியம். முத்துவுக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். முதல் மற்றும் இரண்டாவது மனைவிகள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. முத்து இரண்டு மனைவிகளுடன் சேர்ந்து ஒரே வீட்டில் குடியிருந்து வந்தாரா அல்லது வெவ்வேறு வீடுகளில் குடியிருந்து வந்தாரா என்றால் தெரியாது. முதல் மனைவிக்கு பொன்னம்மாள் என்பவர் மகள் என்றால் சரிதான். முதல் மனைவியை விவாகரத்து செய்யாமலேயே முத்து இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். இரண்டாவது மனைவிக்கு மணிவாசகம் என ஒரு மகன் என்றால் சரிதான். முத்து எந்த வருடம் இறந்தார் என்றால் தெரியாது. முத்துவின் இரண்டாவது மனைவியின் மகனான மணிவாசகம் சட்ட விரோத திருமணத்தின் மூலம் பிறந்த குழந்தை என்பதால் மணிவாசகத்திற்கு ¼ பங்கும், பொன்னம்மாளுக்கு ¾ பங்கும் சட்டப்படி கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. பொன்னம்மாளும், மணிவாசகமும் சொத்தை பிரித்து கொண்டதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை, வாய்மொழியாக பிரித்துக்கொண்டார்கள். வாய்மொழியாக பிரித்துக்கொண்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. மொத்த சொத்தான 4.60 ஏக்கரில் வடபுறம் 2.30 ஏக்கர் பொன்னம்மாளுக்கும், தென்புறம் 2.30 ஏக்கர் மாணிக்கவாசகத்திற்கும் ஒதுக்கப்பட்டதாக என்னுடைய பிராதில் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. எந்த ஆவணத்தின் அடிப்படையில் அவ்வாறு சொல்லியுள்ளேன் என்றால் மணிவாசகம் 1966 ம் ஆண்டு கருப்பையா என்பவருக்கு 1 ஏக்கர் 80 சென்டு எழுதிக்கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் சொல்லியுள்ளேன். மணிவாசகம் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.2 ல்

அவரும், பொன்னம்மாளும் சொத்தை பிரித்துகொண்டதாக வாசகங்கள் இல்லை என்றால் சரிதான், ஆனால் மணிவாசகம் தனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் கிரையம் கொடுப்பதாக சொல்லியுள்ளார். வா.சா.ஆ.2 ல் அவ்வாறு தனக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, சொத்து விவரத்தில் காண்பித்துள்ளார். வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் எனது பூர்வீகபாத்தியமானதும், என் அனுபவத்தில் இருந்து வருகிறதுமான என சொல்லப்பட்டுள்ளதே தவிர எனது பாகத்திற்கு ஒதுக்கப்பட்டதாக மேற்படி ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் என் அனுபவத்தில் உள்ளது என காண்பித்துள்ளார். வா.சா.ஆ.2 ஆவணம் எழுதிக்கொடுத்த பின்னர் மணிவாசகமும், பொன்னம்மாளும் சொத்தை பிரித்துக்கொண்டார்களா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் குறிப்பிட்டுள்ளவாறு 1970 ம் ஆண்டில் மொத்த சொத்தான சர்வே எண்.119/6 ல் கண்ட 4 ஏக்கர் 60 சென்டு நிலத்தை வடபாதி சொத்து, தென்பாதி சொத்தாக பிரித்துக்கொண்டார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. மணிவாசகம் வா.சா.ஆ.2 ல் அவருக்கு சேரவேண்டி பங்கு சொத்தைவிட கூடுதலான அளவு சொத்தை பொறுத்து வா.சா.ஆ.2 கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சர்வே எண்.119/6 என்பது 119/6 ஏ, 119/6 பி என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.119/6 பி என்பது 0.73.00 ஹெக்டேர் விஸ்தீரணம் கொண்டது என்றால் சரிதான். சர்வே எண்.119/6 ஏ என்பது 1.06.00 ஹெக்டேர் விஸ்தீரணம் கொண்டது என்றால் சரிதான். சர்வே எண்.119/6 ஏ மற்றும் 119/6 பி என்பது எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 1988 ம் ஆண்டு. சர்வே எண்.119/6 ஏ என்பது 119/6 ஏ 1 மற்றும் 119/6 ஏ 2 என உட்பிரிவாகியுள்ளது என்றால் அவ்வாறு உட்பிரிவு இல்லை. முருகேசன் பொன்னம்மாள் வகையறாவிடம் எழுதி வாங்கிய வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தில் பட்டா எண்.905, சர்வே எண்.119/6 பி பரப்பு 0.73.0 வுக்கு ஏக்கர் 1 சென்டு 80 ல் நடுப்புறம் சென்டு 45 என கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால்

சரிதான். அவ்வாறு குறிப்பாக காட்டப்பட்டுள்ளது. சர்வே எண்.119/6 பி என தவறுதலாக காட்டப்பட்டுள்ளது. சர்வேஎண்.119/6 ஏல் கண்ட சொத்துதான் பொன்னம்மாள் கிரையம் கொடுத்துள்ளார், நான்குமால் சரியாக உள்ளது. வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தை எழுதி வாங்கிய முருகேசன் என்பவர் மேற்படி கிரைய ஆவணத்தின் சொத்து விவரத்தில் பட்டா எண், சர்வே எண், மொத்த விஸ்தீரணம் போன்றவை தவறாக குறிப்பிடப்பட்டிருப்பதாகவோ அதனை சீர்திருத்தம் செய்து கொடுக்கும்படியோ, மேற்படி ஆவணத்தை எழுதிக்கொடுத்த நபர்களிடம் ஏதேனும், கேட்டாரா, நடவடிக்கை மேற்கொண்டாரா என்றால் இல்லை. அவரது பெயருக்கு நான் தற்போது உரிமைகோரி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள சர்வே எண்.119/6 ஏ–யில் கண்ட சொத்தின் பகுதி சொத்திற்கு பட்டா எதுவும் வந்ததா என்றால் இல்லை. முருகேசன் எந்த வருடம் இறந்தார் என்றால் 2016 ல் இறந்தார். முருகேசன் இறந்த பின்னர் அவரது மனைவி, மக்கள் கிரைய ஆவணத்தில் சர்வே எண் போன்றவற்றை சீர்திருத்தம் செய்து தருமாறு ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டார்களா என்றால் அவர்களுக்கு சொத்தின் சர்வே எண் பற்றிய விவரம் தெரியாது. நான் பத்திரம் எழுதி வாங்கபோகும்போதுதான் அந்த விவரம் அவர்களுக்கு தெரியவந்தது. நான் பத்திரம் எழுதிவாங்குவதற்கு முன்பு சொத்தை அளந்து பார்த்தேனா என்றால் அளந்து பார்த்தேன். அவ்வாறு அளந்து பார்க்கும்போது சர்வேஎண்.119/6 ஏ தனியாகவும், சர்வேஎண்.119/6 பி தனியாகவும் இருந்ததா என்றால் தனித்தனியாக இருக்கிறது. அவ்வாறு தெரிந்த பின்னரும் நான் எழுதி வாங்கிய வாசா.ஆ.7 கிரைய ஆவணத்தில் பட்டா நம்பர் 905, சர்வே நம்பர் 119/6 பி–க்கு பரப்பு 0.73.0 –வுக்கு ஏக்கர் 1 சென்டு 80 ல் நடுப்புறம் சென்டு 45 க்கு பரப்பு ஹெக்டேர் 0.18.22 அளவுள்ளது என குறிப்பிட்டு எழுதி வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தில் கடைசியாக சர்வே எண்.119/6 ஏக்கு புஞ்சை பரப்பு ஹெக்டேர் 1.06.00 என தாக்கலாகி வருகிறது என தவறான உள்நோக்கில் வாசகம் காட்டப்பட்டுள்ளது என்றால்

இல்லை. சர்வே எண்.119/6 ஏயில் இருந்து 119/6 பி பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 கிரைய ஆவணத்தில் சொத்து விவரத்தில் 119/6 பி என காட்டப்பட்டபோதிலும், அதற்கு ஆதரவாக இணைக்கப்பட்டுள்ள 10(1) சிட்டா சர்வே எண்.119/6 ஏ க்கு உண்டானதை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் 14 வது பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ள 10(1) சிட்டாவுக்கான பட்டா, விஸ்தீரணம், சர்வே எண் ஆகியவைகள் சொத்து விவரத்திற்கு மாறாக உள்ளன என்றால் சரிதான்.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.